மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு திருத்தம். நான் இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் தூண்டி விட்டார்கள் என்று சொல்லவில்லை. இந்த அவையிலே உள்ள உறுப்பினர்தான் கொடுத்திருக்கிறார் என்றுதான் சொல்லியிருக்கிறேன், தூண்டிவிட்டார் என்று சொல்லவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த சீட்டைக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் பலதடவைகள் கொடுத்து வருகிறோம். யார் யாருக்கு என்று தெரியாது. இதைப்பொறுத்தவரையில் இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்டுதல் அல்ல, மாணவர்கள் அத்தனைபேரும் சேர்ந்து நடைபெற்றுக்கொண்டு வரும் இயக்கமே தவிர இதில் தனிப்பட்ட கட்சி கிடையாது. நேற்றுகூட அனைத்துக் கட்சி மாணவர்களும் நடத்தியிருக்கிறார்கள். எனவே, இந்த விஷயத்தில் மாணவர்களைப் பழி வாங்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நாளைக்குத் தீர்மானமாகக் கொண்டு வரலாம். எந்தவிதமான நடவடிக்கையையும் மாணவர்கள்மீது எடுக்க வேண்டாமென்று நான் முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆர்டர் இல்லை.

(7) அரசினர் தீர்மானம்.

பேரவைக்குள் துண்டறிக்கைகளை பார்வையாளர் மாடத்திலிருந்து வீசியெறிந்த மாணவர்களை மன்னித்து விடுவது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

" திரு. நடேசன் அவர்களுடைய மகன் பி. என். ராமச்சந்திரன், திரு. ஜி. மைக்கேல் அவர்களுடைய மகன் எம். வின்செண்ட், திரு. ஏ. கே. ராஜையா அவர்களுடைய மகன் கே. ஆர். ரத்னராஜ், திரு. நாச்சிமுத்து அவர்களுடைய மகன் வி. என். சுப்ரமணியம், திரு. குமாரசாமி அவர்களுடைய மகன் டி. கே. கருப்பையா, திரு. சேவடி அனந்தர் அவர்களுடைய மகன் எஸ். புருஷோத்தமன், திரு. தனுஷ்கோடி அவர்களுடைய மகன் டி. கமலக்கண்ணன்

1973 நவம்பர் 27] *[டாக்டர் மு. கருணாநிதி]*

ஆகியோர் இன்று காலை 10-40 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்களைக் கூறிக்கொண்டு, துண்டறிக்கைகளைச் சட்டப் பேரவைக்குள்ளே வீசியெறிந்தனர். இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெருங் குற்றமாதலால் கண்டிக்கத் தக்கது. இருப்பினும் அவர்கள் செயலை இப்பேரவை மன்னித்து விடுகிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : விவாதத்தில் பங்கு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. அவர்கள் மன்னிக்கப்படுகிறார்கள்.

(8) நடைமுறைக் கேள்விகள்.

அரசினர் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பு அளிக்கப்படாமை குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் நிறைவேறியாகி விட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தீர்மானத்தைக் கொண்டுவந்தால் எங்களுக்குப் பேசுவதற்கு உரிமை உண்டா இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார்கள். நீங்களே பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ? அவர் சொல்லி முடியட்டும்.

THIRU K. T. K. TANGAMANI : On a point of Order, Sir. A resolution has been moved by the Hon. Chief Minister.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் பேசி முடிக்கட்டும்.